[1969 செப்டம்பர் 13]

திருவொற்றியூர்-பொன்னேரி சாலையில் இரயில் பாதையின் குறுக்கே மேம்பாலம்

*294 வினா—**திரு. கொளத்தூர் கோதண்டம்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர்-பொன்னேரி சாலையிலுள்ள லெவல் கிராசிங்குக்கு மேல் மேம்பாலம் கட்டுகின்ற செயற்குறிப்பு ஏதேனும் இருக்கிறதா ?

(இ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) அவ்விதச் செயற்குறிப்பு எதுவும் ஆலோசனையில் இல்லை.

(இ) இந்த வினா எழவில்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம் : சென்னைக்கும் நெல்லூருக்கும் இடையிலே ரயில்வே கேட் இருப்பதால் அதிகமான அளவுக்கு போக்குவரத்து பாதிக்கப்படுகிறது. மேலும் அங்கே ஆயில் ரிபைனரி போன்ற தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதால் இது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நம்முடைய சர்க்கார் மத்திய சர்க்காரை வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே சாதிக் பாட்சா : இதைவிட அதிகமான போக்குவரத்து உள்ள இடங்கள் இருக்கும் காரணத்தால் இதைத் தற்போது எடுத்துக் கொள்ள சாத்தியம் இல்லை என்று சொல்லப்படுகிறது.

கும்பகோணம் நகராட்சியில் கேளிக்கை வரி

*295 வினா—**திரு. நா. காசிராமன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் நகராட்சி 1965-66-ம் ஆண்டில் கேளிக்கை வரி மீதான மேல் வரியை உயர்த்தியுள்ளதா ?

(இ) கும்பகோணம் நகராட்சி கேளிக்கை வரி மீது விதித்த மேல் வரி அதிகரிப்பை வருவாய்த்துறை வாரியம் தள்ளிவிட்டதா ?

(உ) நகராட்சி செயற்குறிப்பையும், முடிவையும் தள்ளி வைத்து வருவாய்த் துறை வாரியம் பிறப்பித்த ஆணை செயல்படுவதை அரசு தடுத்து நிறுத்தி வைத்துள்ளதா?

(எ) வருவாய்த்துறை வாரியம் எடுத்த முடிவின் மீது அரசு தடுப்பு ஆணை பிறப்பித்திருந்தபோதிலும், திரைப்பட மாளிகை அதிபர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட கேளிக்கை வரி மீதான மேல் வரியை கும்பகோணம் வணிக வரி அதிகாரி நகராட்சிக்குக் கொடுக்க மறுத்தாரா ?

(ஐ) அவ்வாறு அவர் நிறுத்தி வைத்துக் கொண்ட கேளிக்கை வரித் தொகையும் கேளிக்கை மேல்வரித் தொகையும் எவ்வளவு ?

[1969 செப்டம்பர் 13

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) ஆம்.

(எ) இது குறித்து அரசிடமிருந்து இறுதி ஆணைகள் வரும் வரை தொகை கொடுக்கப்படாமல் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

(ஐ) ரூ. 58,870-16 (ஐம்பத்தெட்டாயிரத்து எண்ணூற்று எழுபது ரூபாய், பதினாறு காசு மட்டும்).

திரு. நா. காசிராமன் : நகராட்சிக்குச் சேரவேண்டிய இவ்வளவு பெரிய தொகையை நிறுத்தி வைப்பதால் நகராட்சி நிதி நிலைமையில் நெருக்கடியான கட்டம் உண்டாகிறது. ஆகவே, உடனடியாகத் தொகையைக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : நகராட்சி மன்றம் குறிப்பிட்ட ஒரு சினிமாக் கொட்டகையினுடைய உரிமையாளர்கள் மீது இந்த வரி விதிப்புப் போட்டதைத் தொடர்ந்து வாரியத்தினிடம் ஆய்வு மனு தாக்கீது செய்யப்பட்டது. 1961-ம் ஆண்டு உள்ளாட்சித் துறைச் சட்டம் விதி 3 (3) பிரிவுக்கு முரணானது என்று இருக்கிறது. கூடுதல் தொகையைத் திருப்பித் தரவேண்டுமென்று கூறப்பட்டது. அதை எதிர்த்து நகராட்சிப் பொறுப்பு அதிகாரி அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறார். சிக்கல் நிறைந்த கும்பகோணம் நகராட்சிப் பிரச்சினையாக இருப்பதால் இது பற்றி அரசாங்கம் வழக்கறிஞர்களோடு தீவிரமாகப் பரிசீலித்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. நா. காசிராமன் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது சிக்கல் நிறைந்த கும்பகோணம் நகராட்சி நிர்வாகம் என்று சொன்னார்கள். பிரச்சினை சிக்கலானதா அல்லது நகராட்சி நிர்வாகம் சிக்கலானதா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : சிக்கல் நிறைந்த கும்பகோணம் நகராட்சிப் பிரச்சினை என்று சொன்னேன். கும்பகோணத்தில் அந்தப் பிரச்சினை இருக்கும் காரணத்தால் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக இருக்கலாம்.

வடுகப்பட்டி ஊராட்சி ஒன்றியம், பள்ளிக் கட்டடம்

*** 296 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், வடுகப்பட்டியில் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளியின் கட்டடம் கட்ட 1964-ல் அஸ்திவாரம் போடப்பட்டதா ?

(இ) இதுவரை கட்டடமே கட்டத் தொடங்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?